1983 நவம்பர் 18]

முகப்புரை

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன்) பேரவை முன்னுள்ள கேள்வி :

"முகப்புரை சட்ட முன்வடிவில் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

" சட்டமியற்றுவதற்கான விதிமுறையில் காணப்படும் 'முப்பத்து மூன்றாம்' என்ற சொல்லுக்குப் பதிலாக, 'முப்பத்து நான்காம்' என்ற சொல் அமைத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

முகப்புரை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 48/1982) திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவு 1983 (ஆ. இ.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஜகத்ரட்சகன் தமிழ்நாடு 1983ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்ட முன்வடிவை (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 1/1983) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.